# அலகுத்தேர்வு : இயல் - 8

**நேரம் : 60 நிமிடம்** **மதிப்பெண் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** $3 \times 1 = 3$

1. தம் + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.

   அ) தம்முயிர் ஆ) தமதுயிர் இ) தம்உயிர் ஈ) தம்முஉயிர்

2. வாழ்வில் உயர கடினமாக ________ வேண்டும்.

   அ) பேச ஆ) சிரிக்க இ) நடக்க ஈ) உழைக்க

3. மணிமேகலை கையில் இருந்த அமுதசுரபியில் உணவு இட்ட பெண் _______ .

   அ) சித்திரை ஆ) ஆதிரை இ) காயசண்டிகை ஈ) தீவதிலகை

**II.பின்வரும் தொடர்களில் அடிக்கோடிட்ட சொற்கள் எவ்வகைப் பெயர்கள் என எழுதுக.**

$3 \times 1 = 3$

4. கைகள் இரண்டும் பிறர்க்கு உதவவே எனச் சான்றோர் கருதினார். - ____________
5. அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூலின் பயனாகும். - ____________
6. குழந்தை தெருவில் விளையாடியது. - ____________

**III. ஒலி வேறுபாடறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** $2 \times 1\frac{1}{2} = 3$

7. அரம் - அறம்
8. மனம் - மணம்

**IV. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்** $3 \times 2 = 6$

9. இன்பநிலை எப்போது வந்து சேரும்?
10. பிற உயிர்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும்?
11. அமுதசுரபியின் சிறப்பு யாது?
12. இடுகுறிப்பெயர் என்றால் என்ன?

**V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** $2 \times 3 = 6$

13. பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?
14. மணிமேகலை மன்னரிடம் வேண்டியது யாது?
15. அறுவகைப் பெயர்ச்சொற்களுக்கும் எடுத்துக்காட்டுகள் தருக.

**VI. அடிபிறழாமல் எழுதுக.** $2 \times 2 = 4$

16. ‘தம் உயிர்போல்’ எனத் தொடங்கும் பராபரக் கண்ணி பாடல்.
17. நீர பிற என முடியும் திருக்குறளை எழுதுக.

*******